**சுருக்கம்**

பள்ளிக்கல்வி ரீ உயர் கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்குதல் ஆணை வெளியிடப்பட்டது ரீ திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (இ2) துறை

அரசாணை (நிலை)
எண்.194 நாள் 10.10.2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 1170 கல்வி அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை நாள் 20-12-93.

2. சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பு நாள் 20.6.2006 உரிமைப் பேராணை மேல் முறையீடு எண்கள். 2604 ரீ 2606/99, 1154-1156, 2150 மற்றும் 1193/2000 மற்றும் 995 முதல் 1003/99.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் நாள் 48872/கே2/2000 நாள் 23.8.2006.

---------

<u>ஆணை</u>

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் முதுகலை ஆசிரியர்கள் உயர்கல்வித் தகுதிக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அ) முதுகலை ஆசிரியர்கள் எம்.பில்./பி.எச்.டி./ பி.ஜி.டி.டி.ஈ போன்ற உயர்கல்வித் தகுதி பெற்றிருப்பின் ஒரு ஊக்க ஊதிய உயர்வு (இரண்டு ஊதிய உயர்வுகள்) வழங்கலாம்.

ஆ) மேற்கண்ட ஊக்க ஊதிய உயர்வு <u>1-3-93 அன்று</u> உயர்கல்வி பெற்றவர்களுக்கு மட்டும் தான் பொருந்தும்.

இ) எதிர்காலத்தில் இச்சலுகை நீட்டிக்கப்பட மாட்டாது.

2. மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் 1-3-93க்குப் பின் பெற்ற உயர்கல்வித் தகுதிக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்காததால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர் சென்னை உயர்நீதிமன்ற நீதிப் பேராணை மனு எண். 17884/98 மற்றும் சில வழக்குகள் தொடர்பாக 12.298ல் வழங்கிய தீர்ப்பில் எம்.பில். தகுதிக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள்/ஒரு ஊக்க ஊதிய உயர்வு (two increments/one incentive increment) வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பினை எதிர்த்து நீதிப்பேராணை பள்ளிக்கல்வி இயக்குநர் உரிமைப் பேராணை மேல் முறையீடு ஒன்றைத் தொடுத்தார். மேலும், பள்ளிக்கல்வி இயக்குநரின் கீழ் உள்ள அலுவலர்கள் மற்றும் உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகிகளும் உரிமைப் பேராணை மேல் முறையீடு செய்தனர். சென்னை உயர்நீதிமன்றம் 20.6.2006 நாளிட்ட தீர்ப்பில் மேற்கண்ட மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்து ஏற்கனவே உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை எட்டு வாரத்திற்குள் செயல்படுத்துமாறு ஆணையிட்டுள்ளது.

3. முதுகலை ஆசிரியர்கள் எம்.பில்./பி.எச்.டி./பி.ஜி.டி.டி.ஈ தகுதிக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து துறையின் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டு மனுக்கள் 20.6.2006 தேதிய தீர்ப்பின்படி தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அரசாணை (நிலை) எண். 1170 க.அ. (ம) தொ. நு துறை நாள் 20.12.93ல் "1.3.93 அன்று" என்ற வாசகத்தை நீக்கம் செய்து திருத்திய அரசாணை வெளியிட்டால் பல்வேறு வழக்குகள் முடிவுக்கு வரும் என்றும், எனவே 20.6.2006 நாளிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளதால் இவ்வரசாணையில் பத்தி 3(ii)ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1.3.93 என்ற வாசகத்தை நீக்கி விடலாமென்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டும், பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்றும் அரசாணை (நிலை) எண். 1170 கல்வி அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை நாள் 20-12-93ல் "1.3.93 அன்று" எம்.பில்./பி.எச்.டி./பி.ஜி.டி.டி.ஈ போன்ற உயர் கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ள நிலையினை மாற்றி அனைத்து முதுகலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் அரசாணை (நிலை) எண். 1170 கல்வி அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை நாள் 20-12-93க்கு கீழ்க்கண்டவாறு தக்க திருத்தம் வழங்கலாம் என்று அரசு முடிவு எடுத்து அதற்கேற்ப, பின்வரும் திருத்தம் வெளியிடுகின்றது.

<u>திருத்தம்</u>

"அரசாணை (நிலை) எண்.1170 கல்வி அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை நாள் 20-12-93ல் உள்ள பத்தி 3 (ii) நீக்கம் செய்யப்படுகிறது."

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண். 61920/கல்வி II/2006 நாள்10.10.2006இல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்

அரசுச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-18(பெயர் உறையில்)
மாநிலக் கணக்காயர்,சென்னை-35.
மாநிலக் கணக்காயர் (CAS),சென்னை ஸ்ரீ 9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/79/35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்துக் கருவூல அலுவலர்கள்.

நகல்
செயலாளரின் தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,சென்னை-9.
ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
நிதி(கல்விII)த்துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வித் துறை (மேநிக) துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிர்வாகச்சீர்திருத்தத் துறை,சென்னை-9.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயமுத்தூர்.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை-9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.